செய்தி வெளியீடு எண்:498 நாள்: 01.08.2017

செய்தி வெளியீடு

# 3–வது தேசிய கைத்தறி தின சிறப்பு கண்காட்சி துவக்க விழா HAND –TEX 2017 – 01.08.2017

கைத்தறி நெசவாளர்களை கௌரவிக்கும் பொருட்டு, 2015 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 7–ஆம் தேதி தேசிய கைத்தறி தினமாக அனுசரிக்க மத்திய அரசு அறிவித்தது. இந்திய வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த சுதேசி இயக்கமானது, 1905 ஆம் ஆண்டு இதே நாளில் நடைபெற்றதால், அதனை நினைவு கூறும் வகையில் ஆகஸ்ட் 7 – ஆம் தேதி தேசிய கைத்தறி தினமாக அனுசரிக்கப்படுகிறது.

முதல் தேசிய கைத்தறி தின விழாவினை 2015 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 7–ஆம் தேதி சென்னையில் நடைபெற்ற தேசிய அளவிலான விழாவில் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் துவக்கி வைத்தார்கள். இரண்டாம் ஆண்டுக்கான தேசிய கைத்தறி தின விழா 2016 ஆம் ஆண்டு வாரணாசியில் மாண்புமிகு மத்திய ஜவுளித் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அகில இந்திய அளவில், தற்போது 2017 ஆம் ஆண்டுக்கான தேசிய கைத்தறி தின விழா கவுஹாத்தியில் நடைபெற உள்ளது.

தமிழ்நாட்டின் கைத்தறித் தொழில் பாரம்பரியமிக்க திறன்வாய்ந்த கலையாக கருதப்படுகிறது. நெசவு செறிந்த ஆடை தயாரிக்கும்

இத்திறன்கள் ஒரு தலைமுறையிலிருந்து இன்னொரு தலைமுறைக்கு பண்டையக் காலத்திலிருந்து தொடரப்பட்டு வருகிறது. கைத்தறித் தொழில் தமிழ்நாட்டில் மிகப்பெரிய பொருளாதார செயல்பாடுகள் கொண்ட தொழில்களில் ஒன்றாக இருப்பதோடு, **1.89** இலட்சம் நெசவாளர் குடும்பங்களைச் சார்ந்த சுமார் **3.19** இலட்சம் நெசவார்களுக்கு வேலைவாய்ப்பும் வழங்கி வருகிறது.

தமிழ்நாட்டில் **2.56** இலட்சம் கைத்தறி நெசவாளர்களை உறுப்பினர்களாகக் கொண்டு **1156** கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்கள் மூலம் **2016–17** ஆம் ஆண்டில் **828** இலட்சம் மீட்டர் கைத்தறி துணிகள் உற்பத்தி செய்யப்பட்டு ரூ.**882** கோடி மதிப்பிற்கான கைத்தறி துணிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

தனித்தன்மை வாய்ந்த கைத்தறி நெசவு இரகங்களான அசல் பட்டுச் சேலைகள், பருத்திச் சேலைகள், வீட்டு உபயோகத்துணிகள், வேட்டிகள், கைலிகள் மற்றும் துண்டுகள் உற்பத்தியில் தமிழ்நாடு இந்தியாவிலேயே மிகவும் முக்கியமான இடத்தை பிடித்துள்ளது. பெரும்பான்மையான கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவு அமைப்பில் உள்ளதால், தமிழ்நாட்டில் கைத்தறிப் பிரிவு தனித்துவம் பெற்று விளங்குகிறது.

கைத்தறி நெசவாளர்களின் நலனுக்காகவும், கைத்தறிப் பிரிவின் வளர்ச்சிக்காகவும், மத்திய மற்றும் மாநில அரசுகள் பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகின்றன. இத்திட்டங்கள்

மாநிலத்திலுள்ள நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

பாரதப் பிரதமர் அவர்கள் கைத்தறி துணிகளின் விற்பனையை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என **07.08.2015–ல்** நடைபெற்ற முதலாவது கைத்தறி தின விழாவில் வேண்டுகோள் விடுத்ததன் அடிப்படையில், **2017–ம்** ஆண்டுக்கான கைத்தறி தின விழாவினை சிறப்பாக கொண்டாடும் வகையில் சிறப்பு கைத்தறி கண்காட்சி **01.08.2017** முதல் **07.08.2017** முடிய சென்னை "கலைவாணர் அரங்கத்தில்" நடத்தப்படுகிறது. இக்கண்காட்சியினை, கைத்தறி மற்றும் துணிநூல் துறையும் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனமும் இணைந்து நடத்துகிறது.

**2017** ஆம் ஆண்டு தேசிய கைத்தறி தினத்தினை முன்னிட்டு தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் கல்லூரிகள், கல்வி நிறுவனங்கள், அரசு அலுவலக வளாகங்களில் சிறப்பு கைத்தறி கண்காட்சிகள் / விற்பனை முகாம்கள் நடத்தப்பட்டு, ரூ.**9.62** கோடி அளவிற்கு கைத்தறித் துணிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் மூலமாக இப்புதிய முயற்சி எடுக்கப்பட்டுள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடைபெறும் **3–வது** தேசிய கைத்தறி தின சிறப்பு கண்காட்சியினை மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர், திரு.ஓ.எஸ்.மணியன் அவர்கள் **01.08.2017** அன்று திறந்து வைத்து முதல் விற்பனையை துவக்கி வைத்தார்கள்.

இக்கண்காட்சியில் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து நூறுக்கும் மேற்பட்ட கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் பங்கேற்று கைத்தறித் துணி இரகங்களை விற்பனைக்கு வைத்துள்ளன. இக்கண்காட்சியில் காஞ்சிபுரம், ஆரணி, சேலம், திருபுவனம் அகிய பகுதிகளில் உற்பத்தி செய்யப்பட்ட பிரசித்தி பெற்ற பட்டுச் சேலைகள், பட்டு வேட்டிகள், கோயம்புத்தூர் மென் பட்டுச் சேலைகள், பரமக்குடி பருத்திச் சேலைகள், செட்டிநாடு சேலைகள், விளந்தை சேலைகள், ஈரோடு மாவட்டத்திலிருந்து பெட்சீட், வீட்டு உபயோக துணி வகைகள், துண்டு இரகங்கள், பவானி ஜமக்காளம், சின்னாளப்பட்டி பருத்திச் சேலைகள், லுங்கிகள் உள்ளிட்ட பல்வேறு கைத்தறி துணி வகைகள் விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ளன. மேலும், தெலுங்கானா, ஆந்திரப்பிரதேசம், அசாம், மத்திய பிரதேசம், ஜார்க்கண்ட், மேற்கு வங்காளம், ஒடிசா, புதுச்சேரி உள்ளிட்ட வெளிமாநிலங்களில் உற்பத்தியாகும் பல்வேறு கைத்தறி இரகங்களும் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. இக்கண்காட்சி 01.08.2017 முதல் 07.08.2017 முடிய தினமும் காலை 10.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை நடைபெறும். **கைத்தறி துணிகளின் விற்பனைக்கு வழக்கமாக வழங்கப்பட்டு வரும் 20% தள்ளுபடியுடன் கூடுதலாக 10% சேர்த்து 30% சிறப்புத் தள்ளுபடி, கண்காட்சியில் பங்குப் பெற்றுள்ள தமிழ்நாட்டு கைத்தறி இரகங்களுக்கு மட்டும் இந்நிகழ்வுக்காக வழங்கப்படுகிறது.**

இவ்விழாவில், தமிழக அரசின் கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறையின் அரசு முதன்மைச் செயலர் திரு.க.பணீந்திர ரெட்டி,

இ.ஆ.ப., அவர்கள் முன்னிலை வகித்தார் மற்றும் கைத்தறி மற்றும் துணிநூல் துறை இயக்குநர் திரு. ச.முனியநாதன், இ.ஆ.ப., அவர்களும், கோ–ஆப்டெக்ஸ் மேலாண்மை இயக்குநர் திரு.தி.ந.வெங்கடேஷ், இ.ஆ.ப., அவர்களும் கலந்து கொண்டனர். இவ்விழாவில் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், கூட்டுறவு சங்கங்களின் நிர்வாகக்குழு பிரதிநிதிகள் மற்றும் சீர்மிகு பெருமக்களும் கலந்துகொண்டு விழாவினை சிறப்பித்தனர்.

07.08.2017 அன்று நடைபெற உள்ள 3–வது தேசிய கைத்தறி தின விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் கலந்துகொண்டு, சிறந்த நெசவாளர்கள், திறன்மிகு நெசவாளர்கள், சிறந்த கைத்தறி ஏற்றுமதியாளர்களுக்கு விருதுகள் மற்றும் பரிசுகள் வழங்க உள்ளார்கள்.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**